(14) 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 16/1983) அதிகார முறையில் வெளியிடுவதை அவசியமாக்குகிற சூழ்நிலையை விளக்கி தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 182 ஆம் விதியின் கீழ் அளிக்கப்படும் விவர அறிக்கை].

இணைப்பு I

(..43—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 24-க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ):—1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தமிழ்நாடு அரசால் தஞ்சாவூரில் தொடங்கப் பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மான்யக் குழு மற்றும் மைய அரசின், பல்கலைக்கழக மான்யக் குழுச் சட்டம் பிரிவு 12 (ஏ)-ன் கீழ் நிதி உதவி பெற, தகுதி உள்ளது தானா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை, பல்கலைக் கழக மான்யக் குழு நியமித்துள்ளது.

1. பேராசிரியர் எம். வி. மாத்தூர்,
எமிரிடிஸ் பேராசிரியர்,
தேசியக் கல்வி திட்டம் மற்றும் நிர்வாக நிலையம்,
புதுடில்லி.

2. பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி,
துணைவேந்தர்,
ஒஸ்மேனியா பல்கலைக் கழகம்,
ஹைதராபாத்.

3. பேராசிரியர் ராம் ஜோஷி,
துணைவேந்தர்,
பம்பாய் பல்கலைக் கழகம்,
பம்பாய்.

4. டாக்டர் ஏ. கே. தான்,
துணைவேந்தர்,
ராஞ்சிப் பல்கலைக் கழகம்,
ராஞ்சி.

5. டாக்டர் டி. பி. பட்நாயக்,
இயக்குநர்,
இந்திய மொழிகள் மத்திய நிலையம்,
மைசூர்.

6. திரு. எம். ஆர். கொல்ஹாட்கர், இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சகம்,
புதுடில்லி.

[1984 பிப்ரவரி 15]

7. ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர், கல்வி, அறிவியல், தொழில்நுட்பவியல் துறை (மாநில அரசு பிரதிநிதி).

இக்குழு உறுப்பினர்களில், பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி, டாக்டர் டி. பி. பட்நாயக் மற்றும் கல்விச் செயலாளர் ஆகியோர் மட்டும் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களிலும் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைப் பார்வையிட்டன. இக்குழுவின் உறுப்பினரான திரு. கொல்ஹாட்கர், மைய அரசு கல்வித் துறை இணைச் செயலாளர் 30–5–83, 31–5–83 தேதிகளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்து தன்னுடைய பரிந்துரைகளையும் பல்கலைக் கழக மான்யக் குழுவுக்கு தந்தார்.

(ஈ) இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பல்கலைக்கழக மான்யக் குழு, தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்தல் வேண்டுமென அரசுக்குத் தெரிவித்தது. இது குறித்துக் கல்வி அமைச்சர், மையக்கல்வி அமைச்சர் பல்கலைக்கழக மான்யக் குழுத் தலைவர் மற்றும் மைய அரசு அலுவலர்களுடன் நேரில் கலந்துரையாடிய பின்னர், பல்கலைக் கழக மான்யக் குழு பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங் களைத் (Institutional Development Grants) தவிர, இதர திட்டங் களுக்கு நிதி உதவி பெற, தமிழ்ப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மான்யக் குழுச் சட்டப் பிரிவு 12 (ஏ)-ன் கீழ் தகுதியானது என அறிவித்து, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்த பின்னரே, பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்குமெனவும், தெரிவித்துள்ளது.

இணைப்பு II

(155-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 32-க்கான விடையைக் காண்க.)

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப்பகுதிகளில் ரூ. 124.658 லட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை நடப்பு நிதியாண்டில் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் கீழ்க்கண்ட புதிய திட்டங்களையும் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

	செலவு (ரூபாய் லட்சத்தில்).
விவசாயம்.	
3 விவசாயக் கிடங்குகள் அமைத்தல்	0.75
தகரக்குப்பத்தில் மாபெரும் பழப்பண்ணை அமைத்தல்	6.82
ஏலகிரி மலையில்மங்கலத்தில் அலங்கார பூங்காவும் பழத்தோட்டமும் அமைத்தல்	1.00
மண்வளப் பாதுகாப்பு	4.00